## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
## O.S. No.1419/2024

**பெயர்– வீரன்**

**தேதி 13.07.2026** **வா.த.சா.1**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். கோபால் என்பவர் எனது குடும்ப நண்பர் என்றால் இல்லை. அவரை எப்படி தெரியும் என்றால் அவர் பீரோ கட்டில் தயார் செய்து விற்பனை செய்து வந்தார் அதை வாங்கும் போன வகையில் கடந்த 6 ஆண்டுகளாக பழக்கம். நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு லட்சம் ரொக்கம் கொடுத்து பிராமிசரி நோட்டு எழுதி வாங்கினேன் ஆனால் பணம் திரும்ப கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்குள் ஏற்கனவே கொடுங்கல் வாங்கல் கிடையாது இது தான் முதல் முறை. நான் பணம் கொடுத்த தேதி 16.10.2021. நான் பணம் கொடுக்கும்போது பத்திரத்தை எழுதிய பரமானந்தம் மற்றும் சாட்சிகள் ஏழுமலை , விநாயகம் இருந்தார்கள். பணம் கொடுக்கும்போது சுமாராக 12 மணி இருக்கலாம். புரோநோட் எழுதி கொடுத்தபிறகு தான் என்னுடைய வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். பிராமிசரி நோட், ஸ்டாம்பை யார் வாங்கினார் என்றால் பிரதிவாதி தான் வாங்கினார். அதில் ஒரு பிராமிசரி நோட் இரண்டு ஸ்டாம்ப் இருந்தது. அதை எழுத ஆரம்பித்த நேரம் தெரியாது. சாட்சிகளை நான் தான் அழைத்தேன். எழுத்தரை இரண்டுபேருமே சேர்ந்து அழைத்தோம். நான் கொடுத்த பணம் எப்படி கிடைத்தது என்றால் விவசாயத்தில் வந்த வருமானம் மற்றும் என்னுடைய ஓய்வூதியத்தை வைத்து கொடுத்தேன். அந்த பணம் என் வீட்டில் தான் வைத்திருந்தேன். வங்கியில் இருந்து எடுத்து வரவில்லை. பிராமிசரி நோட்டில் உள்ள விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் முகவரி மட்டும் நான் சொன்னேன், மற்றவைகளை எல்லாம் அவர் எழுதினார். சாட்சிகள் எல்லாம் வந்த பிறகு தான் கடனுறுதி சீட்டை எழுத ஆரம்பித்தார்கள். சாட்சிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். எழுத்தர்

பெரியசெவலையை சேர்ந்தவர்கள். இரண்டு ஊருக்கும் சுமார் 5 கி.மீ தூரம் உள்ளது. சாட்சிகளின் ஊர், அப்பா பெயர் யார் எழுதினார்கள் என்றால் எழுத்தர் தான் எழுதினார். அவருடைய அப்பா பெயரையும் அவர் தான் எழுதினார். அதில் எழுத்தரின் பெயருக்கும் விலாசத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்க ரொக்கம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் என்ன நோட்டுக்கள் கொடுத்தேன் என்றால் நான்கு 500 ரூபாய் நோட்டு கட்டுக்களாக கொடுத்தேன். என்ன வகை மை பேனாவில் எழுதினார்களா ஒரே மையினால் எழுதினார்களா என்றால் நியாபகம் இல்லை. புரோநோட் எழுதிய பிறகு முதல் பிரதிவாதி கையெழுத்து போட்டார். பிறகு சாட்சிகள் கையெழுத்து போட்டார்கள். அதன் பிறகு எழுத்தர் கையெழுத்து போட்டார். பிராமிசரி நோட்டில் பிரதிவாதி கை ரேகை வைக்கவில்லை. பிராமிசரி நோட்டை எழுதிய பிறகு எழுத்தர் அதனை படித்தார். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு நோட்டிஸ் கொடுத்தேன். மேற்படி நோட்டிசிற்கு பிரதிவாதி பதில் நோட்டிஸ் கொடுத்துள்ளார். அந்த பதில் நோட்டிசில் பிரதிவாதி ரூ.50,000/- மட்டும் பெற்றுக்கொண்டு இரண்டு வெற்று பிராமிசரி நோட்டுக்களில் கையெழுத்து போட்டு கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பொய். அதற்கு பின்னிட்டு ஏழுமலை, கருப்பு செல்வம் மற்றும் எனது வழக்கறிஞர் முன்னிலையில் ரூ.50 ஆயிரமும் அதற்குண்டான வட்டி தொகை முழுவதும் பைசல் செய்து விட்டார்கள் என்றால் அது பொய். அதனால் தான் ஒரு பிராமிசரி நோட்டை பிரதிவாதியிடம் திருப்பி கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இன்னொரு பிராமிசரி நோட்டை எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை என்றும் தேடி பார்த்து தருவதாக சொல்லிவிட்டு அதை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட் சாட்சிகளையும் எழுத்தரையும் நானே அழைத்து வந்தேன் என்றால் சரிதான். புரோநோட் சாட்சிகளில் விநாயகத்தை விசாரிக்கவில்லை. ஏழுமலையை விசாரிக்கின்றேன். புரோநோட் சாட்சிகளும் எழுத்தரும் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களை பயன்படுத்தி இந்த புரோநோட்டை ஜோடித்துக்கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி என்னிடம் 2 லட்சம் வாங்கவில்லை என்றும் அதற்கான அவசியமும் அவருக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் என்ன தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் வீடு ஏலம்

போக போகிறது குடும்ப தேவை என்றார். மேற்படி வீடு ஏலம் போவதாக சொல்லும் காரணத்தை நான் பிராமிசரி நோட்டில் காட்டவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எற்கனவே வாங்கிய பணத்தை வட்டியுடன் திருப்பி பைசல் செய்துவிட்டார் என்றும் அவர் மீது உள்ள பொறாமையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்த தேதிக்கு முன்பாக சுமார் 1 மாத காலம் பணம் கேட்டிருந்தார். எனது வழக்கு பொய்யானது என்றால் அதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(sd/–S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**O.S. No.1419/2024**

**பெயர்– ஏழுமலை** **வா.த.சா.2**

**தேதி 13.07.2026**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் டி.குளத்தூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கு தொடுத்திருக்கிறார் என்றால் வீரன் கோபால் மீது வழக்கு தொடுத்துள்ளார். கோபாலை தெரியும் பார்த்திருக்கிறேன். அவரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 4 ஆண்டுகளாக தெரியும். எப்படி தெரியும் என்றால் மரம் வியாபாரம் செய்ய வருவார். எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் பணம் வாங்கியதை திருப்பி கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவரித எழுதி கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சி கைெ யாப்பம் போட்டுள்ளதால் சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன். கடந்த 16.10.2021 தேதியில் கொளத்தூரில் வீரனின் வீட்டில் வைத்து அந்த பத்திரம் எழுதப்பட்டது. அப்போது நான், விநாயகம், பத்திரத்தை எழுதிய பரமானந்தமும் இருந்தோம். அதை எழுதப்பட்ட நேரம் தெரியுமா என்றால் காலை 10 மணிக்கு மேல் இருக்கும். அப்போது வாதி தான் என்னை சாட்சியாக அழைத்து வந்தார். புரோநோட்டை எழுத சுமார் 10 நிமிடங்கள் ஆனது. வீரன் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.2 லட்சம் 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார். அந்த தொகையை நான் எண்ணி பார்க்கவில்லை. வீரன் சொன்னதை வைத்து சொல்கிறேன். அவர் வங்கியில் இருந்து தான் அந்த பணத்தை எடுத்து வந்தார். நாங்கள் அங்கு போன பிறகு தான் பத்திரம் எழுத ஆரம்பித்தார்கள். முதலில் யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் விநாயகம் போட்டார். இரண்டாவதாக நான் போட்டேன். அதற்கு பிறகு எழுத்தர் கையெழுத்து போட்டார். வாசகங்கள் யார் சொன்னது என்றால் வீரன் சொல்லி எழுதினார். நானும் விநாயகமும் தனித்தனியாகத் தான் அங்கு போனோம். பிராமிசரி நோட்டு மற்றும் ஸ்டாம்பை வீரன் தான் வாங்கி வந்தார். என்னுடைய தந்தை பெயர், முகவரி ஆகியவற்றை எழுத்தர் தான் எழுதினார். எழுத்தருடைய தந்தை பெயர், முகவரியும் அவரே தான் எழுதினார். பிராமிசரி நோட்டை எழுதி

முடிககும் வரை அங்கே தான் இருந்தேன். என்ன மையினால் எழுதினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் அனைவரும் தான் ஒரே பேனாவினால் கையெழுத்து செய்தோம். பணம் கொடுத்த பிறகு தான் பத்திரம் எழுத ஆரம்பித்தார்கள். அதில் கோபால் கையெழுத்துசெய்ததை நான் பார்க்கவில்லை. அதை எழுதிய நபரே அதை படித்தும் காண்பித்தார். என்னை சாட்சி சொல்ல வீரன் தான் அழைத்து வந்தார். அதை பைசல் செய்தார்களா என்றாலும் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பணம் பைசல் செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வீரனும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக கையெழுத்து போட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(sd/–S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**
**<u>O.S. No.1419/2024</u>**

**பெயர்– பரமானந்தம்** **வா.த.சா.3**

**தேதி 13.07.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பெரியசெவலையில் வசித்து வருகிறேன். நான் பெரியசெவலை கூட்டு ரோட்டில் கடை வைத்துள்ளேன். நான் ஆவண எழுத்தல் இல்லை என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கு தொடுத்திருக்கிறார் என்றால் வீரன் கோபால் மீது வழக்கு தொடுத்துள்ளார். வாதி பிரதிவாதிகளை எனக்கு தெரியும். எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் பணம் வாங்கியதை திருப்பி கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி எழுதி கொடுத்த பத்திரத்தை நான் எழுதியதால் சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன். கடந்த 16.10.2021 தேதியில் கொளத்தூரில் வீரனின் வீட்டில் வைத்து அந்த பத்திரம் எழுதப்பட்டது. அப்போது ஏழுமலை, விநாயகம், பத்திரத்தை எழுதிய நான் மற்றும் சம்மந்தப்பட்ட தரப்பினர் இருந்தோம். என்னை யார் அழைத்தது என்றால் வாதி தான் அழைத்து வந்தார். புரோநோட் எழுதப்பட்ட நேரம் தெரியுமா என்றால் காலை 10 அல்லது 11 மணிக்கு மேல் இருக்கும். எழுதுவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும். வீரன் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வீரன் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ..2 லட்சம் 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார். வங்கியில் இருந்து பணத்தை எடுத்து வந்தாரா என்றால் இல்லை அவரே வைத்திருந்தார். பிராமிசரி நோட்டு மற்றும் ஸ்டாம்பை வீரன் தான் வாங்கி வந்தார். பணம் கொடுத்த பிறகு தான் பத்திரம் எழுத ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். யார் சொல்லி நான் எழுதினேன் என்றால் அதில் இருந்ததை அப்படியோ பூர்த்தி செய்தேன். பத்திரத்தில் உள்ள நபர்களின் பெயர், தந்தை பெயர், முகவரி நான் தான் எழுதினேன். பிராமிசரி நோட்டில் உள்ள என் பெயருக்கு அருகே உள்ள விவரங்கள் என்னால் எழுதப்படவில்லை என்றால் சாட்சி ஒப்புக்கொள்கிறார். என்ன மையினால் எழுதினேன் என்றால் நீள கலர் மை ஒரே

பேனாவில் தான் எழுதினேன். புரோநோட்டிற்கான பணத்தை பைசல் செய்துவிட்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை சாட்சிய பத்தி 6ல் உள்ள விவரங்கள் எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். வாதி அழைத்து வந்ததினால் அவர் தயார் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சாட்சி கை யெழுத்து போட்டுவிட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன` என்றால` சரியல்ல. பிராமிசரி நோட்டு எழுதும` போது கோபால் அந்த இடத்தில் இல்லை. ஆனால் கையெழுத்து போட்டுள்ளார்.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(sd/-S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.